MCOP.No. 38 / 2018

Dated : 09.12.2021

Time: 3.02 p.m. To 3.39 p.m.

P.W. - 1 சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

1 ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்குவிசாரணை

நான் கள்ளக்குறிச்சி மாவட்டம், கல்லாநத்தத்தில் குடியிருக்கிறேன். 21.10.2016 ல் விபத்து நடந்தது. விபத்து குறித்து போலீசார் விசாரித்த போது நான்தான் அனைத்து விவரங்களையும் கூறினேன். போலீசார் விசாரித்த போது நான் சென்ற வாகனம் மனுவில் கூறியுள்ளது போல் அதிக வேகமாகவோ, அஜாக்கிரதையாகவோ சென்றதாக கூறவில்லை என்றால் சரிதான். நான் சென்ற வாகனத்தில் யார் யார் செல்லலாம் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். விபத்து நடந்த பிறகு நான் வாலாஜா அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பிறகு வேலூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்றேன். அதன் பிறகு சென்னை ஸ்டான்லி மருத்துவமனைக்கு சென்றேன். வாலாஜா மருத்துவமனையில் 3 மணி வரை இருந்தேன். வேலூர் மருத்துவமனையில் 6,7 மணி வரை இருந்தேன். அதன்பிறகு சென்னை ஸ்டான்லி மருத்துவனையில் சுமார் 25 நாட்கள் இருந்தேன். ஸ்டான்லி மருத்துவமனையிலிருந்து வீட்டிற்கு வந்துவிட்டேன், அதன் பிறகு எந்த மருத்துவமனைக்கும் செல்லவில்லை. வீட்டிற்கு வந்த பிறகு நான் சேலம் அரசு மருத்துவமனைக்கு சென்றேன். சேலம் அரசு மருத்துவமனையில் 5 நாட்கள் உள்நோயாளியாக இருந்தேன். அதன்பிறகு சேலம் மருத்துவமனைக்கு சென்று அங்கு 20,25 நாட்கள் இருந்தேன். அதன் பிறகு சேலம் அரசு மருத்துவமனையில் வெளி நோயாளியாக சிகிச்சை பெற்றுவருகிறேன். நான் வேறு தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாலாஜா மருத்துவமனையிலிருந்து சேலம் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் வரை என்னுடைய வாகன உரிமையாளர் எந்த உதவியும் செய்யவில்லை. நான் வாலாஜா மருத்துவமனையிலிருந்து வேலூர் மருத்துவமனை, சென்னை மருத்துவமனை அங்கிருந்து சேலம் மருத்துவமனை ஆகியவற்றிற்கு என்னுடைய சொந்த செலவில்தான் சென்றேன். நான் நெல் அறுவடை இயந்திரத்தில் வேலைக்கு வருவதற்கு முன்பு 1 ஏக்கர் நிலம் குத்தகைக்கு ஓட்டிவந்தேன், அதில் பருத்தி பயிர் செய்தேன். நான் குத்தகைக்கு எடுத்த நிலத்திலிருந்து வந்த வருமானத்தை கொண்டு என்னால் வெளியூர் சென்று சிகிச்சை மேற்கொண்டிருக்க முடியாது என்றும், என்னுடைய உரிமையாளர் செய்த பணஉதவியால் தான் சிகிச்சை செய்தேன் என்றால் சரியல்ல. எனக்கு 17.08.2016 ல் திருமணம் நடந்தது. இரண்டு பெண், ஒரு ஆண் குழந்தை உள்ளது. விபத்திற்கு பின்பு குழந்தைகள் பிறந்தது. நான் நீதிமன்றத்திற்கு பஸ்ஸில் வந்தேன்.

எனக்கு இடது கை, இடது கால், வலது கால் இடுப்பு பகுதியில் அடிப்பட்டது. நான் பத்தாவது வரை படித்துள்ளேன். வலது கையில் கையெழுத்து போடுவேன். நான் வலது கை பழக்கம் உடையவர். நான் சிகிச்சை முழுதையும் அரசு மருத்துவமனையில் பெற்றுள்ளதால் மருத்துவ செலவிற்காக ரூ.1 லட்சம் இழப்பீடாக கேட்க முடியாது என்றால் சரியல்ல. விபத்திற்கு வாட்சை என்னிடம் திருப்பி கொடுத்துவிட்டார்கள். வாலாஜா மருத்துவமனையிலிருந்து சேலம் அரசு மருத்துவமனை வரை என்னுடன் என் அப்பா இருந்தார். அவருக்கு நான் சம்பளம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். சத்துணவிற்காக முட்டை, கறி, உளுந்தம் பருப்பு அகியவற்றை சாப்பிட்டேன், அந்த வகையில் ரூ.1 லட்சம் செலவானது. அதற்கு பில் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மருத்துவனைக்கு பஸ், காரில் சென்றேன். போக்குவரத்திற்காக சுமார் ரூ.40 ஆயிரம் செலவாகியிருக்கும். ரூ.40 ஆயிரம் செலவு ஆனதாக தவறாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. வருமான இழப்பாக ரூ.1,90,000/- மிகை படுத்தி குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்து சமயம் என்னுடைய முதலாளி எனக்கு மாதம் ரூ.15,000/- சம்பளம் கொடுத்தார். வலி வேதனைக்காக ரூ.2 லட்சம் கேட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. நிரந்தர ஊனத்திற்காக ரூ.4,10,000/- கேட்டுள்ளது தவறு என்றால் சரியல்ல. வருமான ஈட்டும் திறன் இழப்பிற்காக ரூ.10 லட்சம் கேட்டுள்ளது அதிகபடியானது என்றால் சரியல்ல. நான் கிளிநராக சென்றதாக கூறியுள்ளேன், வேலை ஆள் இழப்பீட்டு மனு தாக்கல் செய்யாமல் இந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது தவறு என்றால் சரியல்ல. எனக்கு மருத்துவ செலவு செய்வதற்கோ, மற்ற செலவினங்கள் செய்வதற்கோ வசதி இல்லை என்றும், என்னுடைய முதலாளி தான் எனக்கு பண உதவி செய்தார் என்றும், அதை மறைத்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ரூ.21 லட்சம் நஷ்டஈடு மிகை படுத்தி கேட்டுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்படவில்லை என்றும், என்னுடைய அன்றாட வேலைகளை செய்கிறேன் என்றும், இரு சக்கர வாகனம் ஓட்டி வருகிறேன் என்றும், துணை இன்றி நடந்து வருகிறேன் என்றும், அதனால் நான் கேட்டுள்ள இழப்பீட்டு தொகை அதிகபடியானது என்றால் சரியல்ல. நான் என் விவசாய வேலைகளை செய்து வருகிறேன் என்றும், விபத்தினால் நிரந்தர ஊனம் ஏற்பட்டதாக மனுவிற்காக அதிக நஷ்டஈடு பெறுவதற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

(2 ம் எதிர்மனுதாரர் மேற்படி குறுக்குவிசாரணையை ஏற்றுக்கொள்கிறார்)

Sd/- Selvi.R.Dhanam,
Subordinate Judge,
Attur.